මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. : PE/2024/01** **2024.09.25**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024

## 1981ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் சுயேச்சைக் குழுக்களினால் வைப்புப் பணத்தை வைப்புச் செய்தல் மற்றும் அந்தந்த மாவட்டத்திற்காக அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் பெயர் குறித்து நியமிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள்

மேற்குறிப்பிடப்பட்ட தேர்தலுக்காக தேர்தல் மாவட்டங்களுக்கு தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, பெயர் குறித்த நியமனப் பத்திரத்தினூடாக பெயர் குறித்து நியமிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்புச் செய்ய வேண்டிய வைப்புப் பணம் பற்றிய விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட வேண்டியதில்லை.

**அட்டவணை**

| தேர்தல் மாவட்டத்தின் இலக்கம் மற்றும் பெயர் | தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை | சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்புச் செய்ய வேண்டிய வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. கொழும்பு | 18 | 21 | ரூ .42,000-/ |
| 02. கம்பஹா | 19 | 22 | ரூ .44,000-/ |
| 03. களுத்துறை | 11 | 14 | ரூ .28,000-/ |
| 04. கண்டி | 12 | 15 | ரூ .30,000-/ |
| 05. மாத்தளை | 05 | 08 | ரூ .16,000-/ |
| 06. நுவரெலியா | 08 | 11 | ரூ .22,000-/ |
| 07. காலி | 09 | 12 | ரூ .24,000-/ |
| 08. மாத்தறை | 07 | 10 | ரூ .20,000-/ |
| 09. அம்பாந்தோட்டை | 07 | 10 | ரூ .20,000-/ |
| 10. யாழ்ப்பாணம் | 06 | 09 | ரூ .18,000-/ |
| 11. வன்னி | 06 | 09 | ரூ .18,000-/ |
| 12. மட்டக்களப்பு | 05 | 08 | ரூ .16,000-/ |
| 13. திகாமடுல்ல | 07 | 10 | ரூ .20,000-/ |
| 14. திருகோணமலை | 04 | 07 | ரூ .14,000-/ |
| 15. குருநாகல் | 15 | 18 | ரூ .36,000-/ |
| 16. புத்தளம் | 08 | 11 | ரூ .22,000-/ |
| 17. அநுராதபுரம் | 09 | 12 | ரூ .24,000-/ |
| 18. பொலன்னறுவை | 05 | 08 | ரூ .16,000-/ |
| 19. பதுளை | 09 | 12 | ரூ .24,000-/ |
| 20. மொனராகலை | 06 | 09 | ரூ .18,000-/ |
| 21. இரத்தினபுரி | 11 | 14 | ரூ .28,000-/ |
| 22. கேகாலை | 09 | 12 | ரூ .24,000-/ |

02. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் தெரிவத்தாட்சி அலுவலர் ஆவார். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய வன்னி தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் ஆவார். திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் ஆவார். ஏனைய ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களுக்குரிய தேர்தல் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் / மாவட்ட செயலாளர்கள் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

03. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கான திகதியைக் குறித்துரைத்து அறிவித்தலை பிரசுரித்த திகதியிலிருந்து சுயேச்சைக் குழுக்கள் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை குறித்த தெரிவத்தாட்சி அலுவலருக்கு கையளிப்பதற்கிடைப்பட்ட காலப் பகுதியினுள் அந்தந்தக் குழுக்களினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளர் சார்பிலும் வைப்புப் பணமாக இரண்டாயிரம் ரூபா வீதமான பணத் தொகையை செல்லுபடியாகும் நாணயத்தில் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் வைப்பிலிடுதல் வேண்டும்.

04. வைப்புப் பணத்தை கையேற்கும் பணி குறித்த மாவட்ட செயலகம் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பு மற்றும் ஆலோசனைப் பிரகாரம்,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்